**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

O.S.No.04/2025

பி.வா.சா.1– மணிகண்டன் த/பெ தேவதாஷ் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 20.04.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பி.வா.சா.1–மணிகண்டன் த/பெ தேவதாஷ்</u>**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 வகுப்பு படித்துள்ளேன். தமிழ், ஆங்கிலம் நன்கு படிக்க மற்றும் எழுதத் தெரியுமா என்றால் தமிழ் நன்றாகஎழுதத் தெரியும். நான் சொன்ன சங்கதிகள் அடிப்படையில் எதிர்வழக்குரை, அபிடவிட் தயார்செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி என்ன காரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து 1, 2 வாதிகளின் தந்தை வைரப்பெருமாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் இல்லை அவருக்கும் பங்கும் உள்ளது எனக்கும் பங்கு உள்ளது கந்தசாமி வகையறாவுக்கும் பங்கு உள்ளது.

2. வாதிகள்1, 2 நபர்களுக்கு வைரப்பெருமாள் அப்பா என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண். 145 ஆகும். எனது சொத்தின் சர்வே எண். 145/1 சி ஆகும். தாவா சொத்தின் தென்புறம் தான் எனது சர்வே எண். 145/1 சி உள்ளது என்றால் இருக்கு தென்புறமும் உள்ளது கிழமேலாகவும் உள்ளது. தாவா சொத்தை தர்மலிங்கம், மோகன், சிவகாமி மூவரும் தான் அனுபவத்தில் உள்ளார்களா என்றால் இல்லை எங்களுடைய அனுபவத்தில் உள்ளது.

**<u>வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வழக்கு வாய்தா குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.</u>**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.28 10:56:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.